**தொழில்நுட்பக் கல்வித் துறை**
**அரசினர் பொறியியற் கல்லூரி, செட்டிக்கரை, தருமபுரி**

தமிழ் மன்றம் -"நெல்லிக்கனி" பேரவை -2023

தருமபுரி அரசினர் பொறியியற் கல்லூரி தமிழ் மன்றம் சார்பில் "நெல்லிக்கனி" பேரவை நிறைவு விழா 23.05.2023 அன்று கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கல்லூரியின் முதல்வர் முனைவர் வே. சுமதி அவர்கள் தலைமையேற்று தமிழ் மொழி சிறப்புகள் குறித்தும் தமிழர்கள் பண்பாடு வாழ்வியல் குறித்தும் மாணவர்களுக்கு எடுத்துரைத்தார். தமிழக அரசு சார்பில் உயர்கல்வித்துறையில் பொறியியல் பயிலும் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு தமிழ் மரபு மற்றும் தமிழ் கட்டடக்கலை மற்றும் தொழில்நுட்பவியல் குறித்த பாடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதை எடுத்துரைத்தார்.

இந்நிகழ்வில் சிறப்பு அழைப்பாளராக தருமபுரி அரசு கலைக்கல்லூரி தமிழ் பேராசிரியர் முனைவர் கு. சிவப்பிரகாசம் அவர்கள் கலந்துகொண்டு தமிழ் இலக்கியங்களின் வாயிலாக தமிழர்களின் மரபு பண்பாடு கலாச்சாரங்கள் குறித்து மாணவர்களுக்கு விளக்கவுரை ஆற்றினார். தமிழ் மொழியினை காப்பது என்பது தமிழர் இனத்தை காப்பதற்கு சமம் என்றும் தமிழ் மொழியின் சிறப்புகளை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச்செல்ல அனைவரும் உறுதி எடுப்போம் என்று சிறப்புரை ஆற்றினார்.

இதனைத்தொடர்ந்து தமிழ் மன்றம் சார்பாக நடைபெற்ற பேச்சுப்போட்டி, கவிதைப்போட்டி, கட்டுரைப்போட்டி, ஓவியப்போட்டி, திருக்குறள் ஒப்புவித்தல் போட்டி, வினாடி வினா, பட்டிமன்றம், கதைச்சொல்லுதல் போன்ற பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ் மற்றும் கேடயங்கள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கல்லூரியின் தமிழ் மன்ற ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் முனைவர் ப. பிரேம்குமார் மற்றும் மன்ற உறுப்பின மாணவர்கள் செய்திருந்தனர்.

## அரசினர் பொறியியல் கல்லூரியில்

# தமிழ் மன்றம் "நெல்லிக்கனி" பேரவை நிறைவு விழா



தருமபுரி, மே.26:

தருமபுரி செட்டிக்கரை அரசினர் பொறியியல் கல்லூரியில் தமிழ் மன்றம் சார்பில் 'நெல்லிக்கனி' பேரவை நிறைவு விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கல்லூரியின் முதல்வர் முனைவர் கே.சுமதி தலைமையேற்று தமிழ் மொழி சிறப்புகள் குறித்தும் தமிழர்கள் பண்பாடு வாழ்வியல் குறித்தும் மாணவர்களுக்கு எடுத்துரைத்தார். தமிழக அரசு சார்பில் உயர்கல்வித்துறையில் பொறியியல் பயிலும் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு தமிழ் மரபு மற்றும் தமிழ் கட்டடக்கலை மற்றும் தொழில்நுட்பவியல் குறித்த பாடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதை எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக தருமபுரி அரசு கலைக்கல்லூரி தமிழ் பேராசிரியர் முனைவர் சிவப்பிரகாசம் கலந்துகொண்டு தமிழ் இலக்கியங்களின் வாயிலாக தமிழர்களின் மரபு பண்பாடு கலாச்சாரங்கள் குறித்து மாணவர்களுக்கு விளக்கவுரை ஆற்றினார். தமிழ் மொழியினை காப்பது என்பது தமிழர் இனத்தை காப்பதற்கு சமம் எனவும் தமிழ் மொழியின் சிறப்புகளை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச்செல்ல அனைவரும் உறுதியேற்க வேண்டும் என சிறப்புரை ஆற்றினார்.

இதனைத்தொடர்ந்து தமிழ் மன்றம் சார்பாக நடைபெற்ற பேச்சுப்போட்டி, கவிதைப்போட்டி, கட்டுரைப்போட்டி, ஓவியப்போட்டி, திருக்குறள் ஒப்புவித்தல் போட்டி, வினாடி வினா, பட்டிமன்றம், கதைசொல்லுதல் போன்ற பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ் மற்றும் கேடயங்கள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கல்லூரியின் தமிழ் மன்ற ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் முனைவர் பிரேம்குமார் மற்றும் மன்ற உறுப்பினர் மாணவர்கள் செய்திருந்தனர். இதில் ஏராளமான மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.



தர்மபுரி அரசு பொறியியல் கல்லூரியில் தமிழ்மன்றம் சார்பில் நடந்த நெல்லிக்கனி பேரவை நிறைவு நாள் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

# நெல்லிக்கனி பேரவை நிறைவு விழா

தர்மபுரி, மே 24-

தர்மபுரி அரசு பொறியியல் கல்லூரி தமிழ் மன்றம் சார்பில், நெல்லிக்கனி பேரவை நிறைவு விழா நடந்தது. கல்லூரி முதல்வர் சுமதி தலைமை வகித்து, தமிழ் மொழியின் சிறப்புகள் குறித்தும், தமிழர்கள் பண்பாடு மற்றும் வாழ்வியல் குறித்தும் மாணவர்களுக்கு எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக தர்மபுரி அரசு கலை கல்லூரி தமிழ்த்துறை பேராசிரியர் சிவப்பிரகாசம் கலந்துகொண்டு, தமிழ் இலக்கியங்களின் வாயிலாக தமிழர்களின் மரபு, பண்பாடு கலாச்சாரங்கள் குறித்து மாணவர்களுக்கு விளக்கி கூறினார்.

தொடர்ந்து தமிழ் மன்றம் சார்பாக நடந்த, பேச்சு போட்டி, கவிதை, கட்டுரை, ஓவியப்போட்டி, திருக்குறள் ஒப்புவித்தல் போட்டி, வினாடி வினா, பட்டிமன்றம், கதை சொல்லுதல் போன்ற பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பாராட்டு சான்றிதழ் மற்றும் கேடயங்கள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கல்லூரியின் தமிழ் மன்ற ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் பிரேம்குமார் மற்றும் மன்ற உறுப்பினர்கள், மாணவர்கள் செய்திருந்தனர்.

# அரசு கல்லூரியில் பேரவை விழா



தர்மபுரி அரசு பொறியியல் கல்லூரியில் நடந்த பேச்சு போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டது.

தர்மபுரி, மே 24: தர்மபுரி அரசு பொறியியல் கல்லூரியில், தமிழ் மன்றம் சார்பில் நெல்லிக்கனி பேரவையின் நிறைவு விழா கல்லூரியில் நடைபெற்றது. நிகழ்ச்சியில், கல்லூரி முதல்வர் சுமதி தலைமை வகித்து பேசும் போது, தமிழ் மொழியின் சிறப்புகள், தமிழர்கள் பண்பாடு வாழ்வியல், அரசு சார்பில் உயர்கல்வித்துறையில் பொறியியல் பயிலும் முதலாமாண்டு மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தமிழ் மரபு மற்றும் தமிழ் கட்டடக்கலை -தொழில்நுட்பவியல் பாடங்கள் குறித்து பேசினார்.

சிறப்பு அழைப்பாளராக தர்மபுரி அரசு கலைக்கல்லூரி தமிழ் பேராசிரியர் சிவப்பிரகாசம் கலந்து கொண்டு, தமிழ் இலக்கியங்களின் வாயிலாக தமிழர்களின் மரபு, பண்பாடு மற்றும் கலாச்சாரங்கள் குறித்து பேசினார். இதனைத்தொடர்ந்து தமிழ் மன்றம் சார்பில் நடந்த பேச்சு, கவிதை, கட்டுரை, ஓவியம், திருக்குறள் ஒப்புவித்தல் போட்டிகள், வினாடி வினா, பட்டிமன்றம், கதைசொல்லுதல் போன்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டது. ஏற்பாடுகளை கல்லூரியின் தமிழ் மன்ற ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் பிரேம்குமார் மற்றும் மன்ற மாணவர்கள் செய்திருந்தனர்.

# தருமபுரி அரசு பொறியியல் கல்லூரியில் தமிழ் மன்ற பேரவை நிறைவு விழா



தருமபுரி அரசு பொறியியல் கல்லூரியில் நடந்த தமிழ் மன்ற விழாவில், போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

தருமபுரி

தருமபுரி அடுத்த செட்டிக்கரை அரசு பொறியியல் கல்லூரியின் தமிழ் மன்றம் சார்பில் நேற்று நெல்லிக்கனி பேரவை நிறைவு விழா நடந்தது. கல்லூரி முதல்வர் முனைவர் சுமதி தலைமை வகித்து, தமிழ் மொழியின் சிறப்புகள் குறித்தும், தமிழர்கள் பண்பாடு, வாழ்வியல் குறித்தும் பேசினார்.

மேலும், பொறியியல் முதலாமாண்டு பயிலும் மாணவர்களுக்கு உயர் கல்வித்துறை சார்பில் தமிழ் மரபு மற்றும் தமிழ் கட்டடக்கலை மற்றும் தொழில்நுட்பவியல் குறித்த பாடங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ள தகவலையும் தெரிவித்தார்.

தொடர்ந்து, நிகழ்ச்சியின் சிறப்பு அழைப்பாளரான தருமபுரி அரசு கலைக் கல்லூரி தமிழ்த் துறை பேராசிரியர் முனைவர் சிவப்பிரகாசம் பேசும்போது, 'தமிழ் மொழியைக் காப்பது என்பது தமிழர் இனத்தை காக்கும் செயல். எனவே, தமிழ் மொழியின் சிறப்புகளை அடுத்தடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்ல அனைவரும் உறுதி எடுத்து செயல்படுவோம்' என வலியுறுத்தினார்.

அதேபோல, தமிழ் மன்றம் சார்பில் நடந்த பேச்சு, கவிதை, கட்டுரை, ஓவியம், திருக்குறள் ஒப்புவித்தல், வினாடி-வினா, பட்டிமன்றம், கதை சொல்லுதல் உள்ளிட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ், கேடயங்கள் வழங்கி பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

ஏற்பாடுகளை கல்லூரியின் தமிழ் மன்ற ஒருங்கிணைப்பாளர் முனைவர் பிரேம்குமார் தலைமையிலான குழுவினர் செய்திருந்தனர்.


தமிழ் மன்றம்
நெல்லிக்கனி
2022-2023
23 05 2023


அரசினர் பொறியியல் கல்லூரி
தருமபுரி - 636704
தமிழ் மன்றம்
நெல்லிக்கனி
2022 - 2023



